பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 01 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால் சிறந்த அரசு நிர்வாகமும், வளர்ச்சியும் உறுதி செய்யப்படும் என்று பிஜேபி-யின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2) பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மதுராந்தகத்தில் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) தமிழக அரசு ஊழியர்களின் பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், எஞ்சியவை குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4) தமிழக சட்டப்பேரவையில் அஇஅதிமுக சார்பில் கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து, அக்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.

5) ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் நீல் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால் சிறந்த அரசு நிர்வாகமும், வளர்ச்சியும் உறுதி செய்யப்படும் என்று

பிஜேபி-யின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக மக்களின் நலனும், கண்ணியமும் காக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் திமுக-வை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் தமிழகத்தின் பல்வேறு கட்சியை சேர்ந்த தலைவர்கள் இணைந்து தேர்தலை சந்திக்க ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணியால் மட்டுமே வலுவான செயல் திறன் மிக்க அரசை அமைக்க முடியும் என்றும், அதன் பிறகுதான் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்களின் நம்பிக்கையை காங்கிரஸ் கட்சி முற்றிலுமாக இழந்துவிட்டதாக கூறிய அவர், பீகார், மகாராஷ்ட்ரா உள்ளிட்ட மாநில தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியை சந்தித்ததாக தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியும், அவர்களோடு கூட்டணி சேர்ந்தவர்களும் அரசியலைவிட்டு செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

முன்னதாக, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து பேசியபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

திமுக மக்கள் நலனுக்கும், வளர்ச்சிக்கும் எதிராக செயல்பட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

அக்கட்சியின் திரு உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மத்துக்கு எதிராக கூறிய கருத்துகளால் உயர்நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளானதையும் திரு பியூஷ் கோயல் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில், தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை கலந்துகொள்வது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

மற்றொரு பதிவில், மத்திய அமைச்சரும், தமிழக பிஜேபி மேலிடப் பொறுப்பாளருமான திரு பியூஷ் கோயல் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியான அஇஅதிமுக-வின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசியிருப்பதும் தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வருவதை முன்னிட்டு, சென்னை — திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை அறிவித்துள்ளது.

நாளை காலை 7 மணிமுதல், மாலை 7 மணிவரை ஜிஎஸ்டி சாலையில் சென்னை - திருச்சி மார்க்கமாகவும், திருச்சி — சென்னை மார்க்கமாகவும் செல்லும் வாகனங்கள் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்படும் என்றும் காவல்துறை அறிவித்துள்ளது.

பிரதமரின் வருகையையொட்டி ஏழடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செங்கல்பட்டு மாவட்ட செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சுரேகா 43 Sec.)***

<<<<<<<>>>>>

தமிழக அரசு ஊழியர்களின் பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று, இதுதொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்து பேசிய முதலமைச்சர், 23 ஆண்டுகால பிரச்சினையை தீர்த்து வைத்ததாக அரசு ஊழியர் சங்கங்களை சேர்ந்த பொறுப்பாளர்கள் மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

அரசு ஊழியர்களின் ஒன்று இரண்டு சதவீத பிரச்சினைகளை தவிர, அனைத்திற்கும் தீர்வுகாணப்பட்டு விட்தாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேபோன்று, பகுதிநேர ஆசிரியர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளோடும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும், அவர்களின் கோரிக்கைகளும் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அஇஅதிமுக சார்பில் கொண்டுவரப்பட்ட கவனஈர்ப்பு தீர்மானத்தை பேரவையில் கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து, அக்கட்சி உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

நேரமில்லா நேரத்தின்போது தாங்கள் கொடுத்த கவனஈர்ப்பு பிரச்சினை குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.

பேரவைத் தலைவர் திரு அப்பாவு, ஏற்கனவே 15 கவனஈர்ப்பு தீர்மானங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும், அவற்றுக்குப்பின் அஇஅதிமுக-வின் கவனஈர்ப்பு கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இதனை ஏற்க மறுத்த அஇஅதிமுக உறுப்பினர்கள், அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

சிறிது நேரத்திற்கு பிறகு அவை நடவடிக்கைகளில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<<>>>>>

தஞ்சை மாவட்டம் பேராவூரணி அரசு மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் கூடுதல் மருத்துவ கட்டமைப்பு விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்று மக்கள்

நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில், கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், தமிழகத்தில் இன்னும் பத்து நாட்களில் 642 துணை சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

பாபநாசம் வட்டம் வீரமாங்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில 25 KV மின்மாற்றி மற்றும் இதர உபகரணங்கள் அமைத்து தரப்படும் என்றும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கடலோர மற்றும் உள் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் நாளை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 28 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல் விளக்க மையத்தினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று திறந்துவைத்தார்.

-----------------

விழுப்புரத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த விழிப்புணர்வு முகாமினை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

வேலூர் மாவட்டத்தில் தேசிய போக்குவரத்து வார விழாவை முன்னிட்டு, ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை முகாமினை ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தொடங்கிவைத்தார்.

---------------------

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

--------------------

திண்டுக்கல்லில் நடைபெற்றுவரும் காவலர் உடல்தகுதி தேர்வை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு பிரதீப் ஆய்வு செய்தார்.

-----------------

நாமக்கல் காவல்துறை சார்பில், தலைக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தி, விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

அரியலூரில் சாலை பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வலியுறுத்தி, காவல்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

----------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் காவல்துறையால் பறிமுதல் செய்யப்பட்ட **46** இருசக்கர வாகனங்கள் ஏலம் விடப்பட்டது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்ட்ரியாவின் நீல் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **7-6, 3-6, 7-6** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Pierre Herbert** — ஆஸ்திரேலியாவின் **Jordan** இணையை வென்றது.

------------

புவனேஷ்வரில் நடைபெற்று வரும் ஒடிசா அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் தமிழக அணி முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் **7** விக்கெட் இழப்பிற்கு **281** ரன் எடுத்துள்ளது.

**<<<<<<<END>>>>>**